**செய்தி வெளியீடு எண்: 64** **நாள்:14.05.2021**

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் ‘கொரோனா நோய்த் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக, தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்குவீர்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில், சென்னை, சாலிகிராமத்தில், தனியார் நிறுவனத்தில் தற்காலிக இரவுக் காவலராகப் பணிபுரிந்து வரும் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சார்ந்த திரு. தங்கதுரை (வயது 59) தனது ஒரு மாத சம்பளத்தை, பொதுப் போக்குவரத்து தற்போது இல்லாத சூழ்நிலையில், மிதிவண்டியில் வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வழங்க முயற்சித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவல் பணி காரணமாக, அவரை நேரில் சந்தித்து வழங்க இயலாததால், தனது ஒரு மாத ஊதியமான ரூ. 10,101/–ஐ அரசுக் கணக்கில் சேர்த்துள்ளார் என்பதை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரு. தங்கதுரை அவர்களை இன்று (14–5–2021) நேரில் அழைத்து, நிதி வழங்கியமைக்காக தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு, அவருக்கு தனது அன்புப் பரிசாக புத்தகம் ஒன்றையும் வழங்கினார்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**